அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RLTOP: 14/2022

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 18–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| ம.சா.1 | 18.06.2025 |
| பெயர் ஜெகதீசன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>முதல் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1.நான் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்தில் பத்தி 4 ல் நான் முதல் தளத்தில் வாடகை விட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேலும் 9 வது பத்தியில் எதிர்மனுதாரர் illegal occupation ஆக உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாடகை தாரர் வீட்டை காலி செய்வார் என்று எனக்கு சொத்தை விற்ற நபர் தான் உறுதி அளித்தார் என்றாலும் வாடகைதாரர் சொல்லவில்லை என்றாலும் சரிதான். எனக்கு சொத்தை விற்றவர்கள் மீது வழக்கு எதுவும் தொடர்ந்தேனா என்றால் இல்லை. வாடகைதாரர் வீட்டை காலிசெய்யததால் சட்டப்படி நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2, எனக்கு வீட்டை விற்ற நபருக்கும் வாடகைதாரருக்கும் என்ன உறவுமுறை உள்ளது என்றால் எனக்கு வீட்டை விற்று 2 மாதங்களுக்கு பிறகு அவரது மகளை வீட்டில் குடிவைத்துவிட்டார். எனது வழக்கறிஞரின் அறிவிப்பு மனு மற்றும் நிருபணவாக்குமூலத்தில் ஏற்கனவே வாடகைதாரர் இருந்ததாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல. ஏற்கனவே வாடகைதாரர்கள் இருந்தார்கள். எனக்கு வீட்டை விற்ற மல்லிகாவின் மகள் தான் தற்போது வாடகைதாரர் என்றாலும் எனவே எதிர்மனுதாரர் வாடகைதாரர் இல்லை என்றாலும் , எனக்கு கொடுக்கப்பட்ட பவரை தவறாக பயன்படுத்தி எனது மனைவியன் பெயரில் விற்பனைபத்திரம் பொய்யாக தயார் செய்து இவ்வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாயார் என்னிடம் கடன் வாங்கியது சம்மந்தமான Bank statement அனைத்தும் நான் வைத்துள்ளேன். மல்லிகா என்பவர் என்னிடம் ரூபாய் 60 லட்சம் கடன் வாங்கினார். எதிர்மனுதாரரின் தந்தை வங்கியில் வாங்கிய கடனிற்கும் ரூபாய் 19,35,000/- கொடுத்துள்ளேன். நான் சொல்வது போல் எதிர் மனுதாரரின் பெற்றோர் வங்கிகடன் எதுவும் பெறவில்லை என்றாலும் எதிர்மனுதாரரின் தந்தை என்னிடம் பெற்ற கடனுக்காக கொடுத்த பவர் பத்திரத்தை பயன்படுத்தி நான் தவறாக வழக்க தாக்கால் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. எனது பெயரில் உள்ள பவர் பத்திரத்தை ரத்து செய்வது சம்மந்தமாக பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் இந்த மனுவழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு வழிவகை

இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.